ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம.

SRI VAISHNAVAN.

ஸ்ரீ வைஷ்ணவன்.

உண்மையறிவை உணர்த்தும்

ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

" எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு "

தொகுதி 6.	1106-ம் ௵ பிரமோதூத ௵ மார்கழி ௴	பகுதி 2.

நம்மாழ்வார் வணக்கம்

வரையாமலீகின்ற தாருவே பொற்கொடை
வழங்கிடுங் கன்னனென்றும்
மலையா சலத்திலுறை குறுமா முனிக்கு நிகர்
வண்டமிழ்க் கிறைவனென்றுந்
திரைமோதுபாற் கடற்றுயில் கூர்முகுந்தனிற்
றேவாதி தேவனென்றுந்
தேனூற்று மலரவாளி செங்கரத் தேந்திடுஞ்
சிலைபா ரனங்கனென்றும்
விரையாரு மகிழ்மாலை விண்டு தேன் வடிகின்ற
விமலனே நின்னையலது
வீணரைப் பாடியே காலங் கழிக்க நீ
விட்டிடி னினக்கு நன்றே
சிலையாகி நரைமேனி யுழலாத முன்ன நின்
திருவடிக்காட் கொள்ளுவாய்
திரைபொருவு பொருநைத் திருக்கரை மருவு குருகைவரு
திருமருவு மகிழ்மாறனே.

ஸ்ரீ

அகற்ற வேண்டிய ஓர் துர்நாற்றம்.

நாஸ்திக வாத மறுப்பு.

பரிமளம் கமழும் பூஞ்சோலையில் ஓர் பக்கம் துர்நாற்றம் உண்டானால் அது மக்கட்கு எத்துணை அருவருப்பை உண்டாக்குமென்பது சொல்லாமலே விளங்குமல்லவா? அது போன்று விதம் விதமான ஞான விருக்ஷங்கள் செழித்து வளர்ந்து ஞான பரிமளத்தை யளித்துவரும் இவ்விந்திய நாட்டிலே தற்போது ஓர் துர்க்கந்தம் வீசி வருகின்றது. அத்துர்க்கந்தத்தால் பலர் பாதிக்கப்பட்டு மதி கலங்கி மயக்குற்றிருக்கின்றனர். இத்துர்க்கந்தம் யாதென்பதையும் இது எங்கிருந்து வருகின்றதென்பதையும் மக்கள் அறிந்து அகற்றுவது அவசியமாதலின் அதைப்பற்றிச் சிறிது பேசுவோம். மக்கட்குக் கடவுள் சிந்தனை வேண்டாமென இக்காலத்தில் ஓர் சிலர் கூறித்திரியும் ஆபாசக்கொள்கைப் பிரசாரத்தையே யாம் துர்க்கந்தமாக இங்ஙனம் கூறிப்போந்தோம். இவ்வாபாசப் பிரசாரகர்கள் கடவுளை நேரில் கண்டோர் ஒருவருமில்லையெனவும், அக்கடவுளுக்காக ஆலயங்கள் அமைப்பதும் விக்ரக வழிபாடுகளியற்றுவதும் முற்றிலும் மதியீனமெனவும் போதனை செய்கிறார்கள். அந்தோ! பரிதாபம்! இவர்கள் எந்த ஆராய்ச்சியைக்கொண்டு இம்முடிவுக்கு வந்தார்களென்பது எமக்கு விளங்கவில்லை. மத சம்பிரதாயப் பழக்க வழக்கங்களில் அறிவீனமும், அக்கிரமமும் அதிகப்பட்டால் அதற்குக் கடவுள் தலையில் ஏன் கை வைக்கவேண்டும்? உண்மை யறிவை எடுத்துக்கூறி மக்களை நல்வழிப் படுத்தப் போதிய வழிகளும், வசதிகளுமிருக்க, இவர்கள் அதை விடுத்து நாஸ்திகப் பிரசாரத்தில் ஏன் இறங்க வேண்டும்? இந்நாஸ்திகப் பிரசாரத்தினால் மக்கள் நல்லறிவு பெற்று நல்லொழுக்கத்தை யடைவார்களென இவர்கள் எண்ணுவார்களாயின் அது குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்ட கதையாக முடியுமென்பதில் சந்தேகமில்லை.

இனி இவர்கள் கூறும் நாஸ்திக வாதத்திற்குச் செல்வோம். இவ்வாதத்தை மறுத்து ஆஸ்திகத்தை நிலை நாட்டுதற்கு விளக்க வேண்டிய அம்சங்கள் பலவுள. அவைகளை இங்கு விவரிக்கப்புகின்

பக்கம் பக்கமாய்ப் பெருகி விரியுமாதலால் அதனை விடுத்து இரண்டொரு யுக்தி வாதங்களை மட்டும் இங்ஙனம் கூறுவாம்.

கடவுள் இருக்கிறாரென்று நிச்சயமாக நம்பமுடியாத காரணத்தால் கடவுள் சிந்தனை வேண்டாமெனக் கூறும் நண்பர்கட்கு ஓர் விஷயம் தெரியச் செய்கிறேன். அதாவது:- அந்நண்பர்கள் தங்கள் சரீரம் எவ்விதம் சிருஷ்டி செய்யப்பெற்றதென்பதை அறிய முயலவதாம இவ்வொரு விஷயத்தை இவர்கள் ஆய்ந்து ஆய்ந்து கூர்ந்து நோக்குவரேல் இவர்கள் விரைவில் கடவுள் இருக்கிறாரென்ற முடிவுக்கு வருதல் வேண்டும். உலகில் ஓர் புதிய சரீரத்தை அதாவது ஓர் சிசுவை உற்பத்தி செய்தற்கு ஒரு ஆணும் பெண்ணுமான இரு மூல சரீரங்கள் வேண்டியிருககிறதல்லவா? இம்மூல சரீரங்களின் சாரமாகவே புதிய சரீரம் உண்டுபண்ணப்படுகிறது. இம்மூல சரீரங்கள் இலலாமல் புதிய சரீரம் உற்பத்தியாகாதென்பதை எல்லோரும் அறிவர். இம்முறையை நோக்கும்போது மக்கள் எல்லோரும் அவரவர்கட்கு முன்னுள்ள ஆணும் பெண்ணும் சேர்ந்த இருமூல சரீரங்களால் உற்பத்தி செய்யப்பட்டவர்களென்றே கோடல் வேண்டும். ஒருவன் தனது முப்பாட்டன் நான்காவது பாட்டன், பத்தாவது பாட்டன், நூறுவது பாட்டன் இவர்களை நேரில் காணவில்லையாயினும் அவர்களிருந்தார்களென்று அனுமானப் பிரமாணத்தால் கொள்ளவேண்டியதவசியமல்லவா? ஆகவே ஆதிகாலத்தில் மக்களின் உற்பத்திக்குக் காரணபூதராக ஆணும் பெண்ணும் சேர்ந்த ஓர் திவ்விய தம்பதிகள் இருக்கவேணுமென நிச்சயித்தல் அவசியமாகிறது. அத்தம்பதிகளையே வைணவா லக்ஷ்மீ நாராயணரெனவும் கடவுளெனவும கூறுகின்றனர். இவர்கள மக்கட்கு மூலகாரணர்களாயிருப்பதால் லக்ஷ்மியை உலகமாதாவெனவும் நாராயணனை உலகபிதாவெனவும் ஆதி முதல்வனெனவும் கூறப்படுகிறது. மேலும் இவ்வுலக இயக்கத்தை ஆய்ந்து நோக்கும போழ்து இவ்வுலகம அடிக்கடி தோன்றியழியும் தன்மையதாயிருப்பதாலும், எல்லையற்ற காலதத்துவத்தில் எவ்வளவோ உலகங்கள தோன்றுவதும் அழிவதுமாய் இயஙகிக கொண்டிருப்பதாலும், உலகங்கள் தோன்றுமபோதெல்லாம் மக்களை சிருஷ்டிசெய்து அருள்புரிதற்கு ஆணும் பெண்ணும் சேர்ந்த மூல சரீரம் வேண்டியது அவசியமாயிருத்தலாலும் இந்த லக்ஷ்மீ நாராயண உருவத்தை நித்தியப் பொருளாகக் கருதப்படுகிறது.

மேற்கூறியவை யனைத்தும் அநுமானத்தால் நிச்சயித்த முடிவுகளாகும். இம்முடிவை உண்மையெனக் கொள்வது தகுமோவென்னில் தர்க்க சாஸ்திர விதிப்படி ஒரு பொருளின் உண்மை நிலையைக் கண்டறிய மூன்று பிரமாணங்களை ஆதாரமாகக் கோடல் வேண்டும். அதாவது பிரத்தியக்ஷம், அநுமானம், சாஸ்திரம் என்பதாம். பிரத்தியக்ஷமாவது — நெருப்பை நேரே கண்களால் பார்ப்பது. அநுமானமாவது:— ஒரு வீட்டின் முகட்டின் மேல் புகையைக் கண்டு வீட்டிற்குள் நெருப்பிருப்பதாக அநுமானிப்பது. இவ்விடத்தில் நெருப்பை நேரே காணவிட்டாலும் புகையின் மூலமாய் நெருப்பிருப்பதாய் நிச்சயிப்பது. சாஸ்திரமாவது:— இவ்விதம் அறிஞர்களால் நிச்சயிக்கப்பட்ட உண்மைகளை அப்போதைக்கப்போது எழுதி வைத்திருப்பது. ஆக இம்மூன்று பிரமாணங்களைக்கொண்டு பொருள்களின் லக்ஷணம் நிச்சயிக்கப்படுகிறது. இம்முறையில் மக்களிடமிருந்து புதிய சரீரம் உற்பத்தியாகிற தன்மையைப் பிரத்தியக்ஷமாக் கவனித்து பின்னர் அநுமானத்தின் பேரில் மக்களது ஆதிஉற்பத்திக்குக் காரணமாக ஆண் தன்மையும் பெண் தன்மையும் அமைந்த ஓர் மூலமூர்த்தி இருப்பது உண்மையென நம்பப்படுகிறது. சாஸ்திரமும் இவ்வுண்மையை அறிவுறுத்துவதால் இம்மூன்று பிரமாணங்களின்படி ஆதியந்த மற்ற மூலக்கடவுள் உளரென்பது தெளிவாயிற்று.

[N. B:— இதில் ஓர் நுணுக்கம் கவனிக்கப்படல் வேண்டும். அதாவது மக்களது சரீர இயற்கைக்கும் லக்ஷ்மீ நாராயணரது சரீர இயற்கைக்கும் மிகுந்த வித்தியாசமுளது. ஆதலால் லக்ஷ்மீ நாராயணர் மக்களை உற்பத்தி செய்விக்கிற முறைக்கும், மக்கள் சிசுக்களை உற்பத்தி செய்விக்கிற முறைக்கும் மிகுந்த மாறுபாடு உளது. இவைகளையும் மற்ற திரியக் ஸ்தாவரங்கள் எவ்விதம் சிருஷ்டி செய்யப்படுகிறதென்பதையும் முன்னோர் மொழிந்த மொழிகளை யநுசரித்து பின்னர் ஒரு முறை எழுதுவோம்.]

* அல்லலி லின்பம் அளவிறந்தெங்கும் அழகமர் சூழொளியன்
அல்லி மலர்மகள் போக மயக்குகள் ஆகியும் நிற்குமம்மான்
எல்லையில் ஞானத்தன் ஞானமஃதே கொண்டெல்லாக்கருமங்களுஞ்செய்
எல்லையின் மாயனைக் கண்ணனைத் தாள்பற்றி யானோர் துக்கமிலேனே.

இக்கவியால் லக்ஷ்மியும் நாராயணரும் சேர்ந்த உருவத்திருமேனி விளக்கப்படுகிறது. (ப—ர்.)

* திருவா- 3-ம் பத்து 10-ம் திருவாய்மொழி.

ஸ்ரீ

ஸ்ரீ வைஷ்ணவ தர்மம்.

ஆசார்யபக்தி.

பிரபலமான ஸ்ரீ வைஷ்ணவ சமயாசாரியர்களில் ஆளவந்தார் என்பார் ஒருவர். இவர் சிறந்த தத்துவக்கியானி. சொல்வன்மையில் தேர்ந்தவர். இவரது ஞான பக்தியாதிகுணவிசயங்களினால் பல்லாயிரக்கணக்கான மாந்தர்கள் இவருக்கு சீடரானார்கள். இவர்களில் தெய்வவாரியாண்டான் என்பார் ஒருவர். இவர் ஸ்ரீ ஆளவந்தாரிடத்தில் மிகுந்த பக்திவிசுவாசமுள்ளவர். ஆளவந்தாருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்வதும், அவரது திவ்விய குணமருதத்தைப் பருகுவதுமே இவருக்குப் பரம சந்தோஷம். இவர் இவ்விதம் வாழ்ந்துவரும்போது திருவரங்கம் பெரிய கோ[illegible] திருவத்யயன உற்சவம் நடவாநிற்க, ஓர் நாள் ஆளவந்தார் பல சீடர்களுடன் பெரியபெருமாள் கோஷ்டிக்கு எழுந்தருளினார்; அச்சமயம் திருவரங்கப் பெருமாள் அரையர் “கெடுமிடராயவெல்லாம்” என்ற திருவனந்தபுரம் கோவில்திருவாய்மொழியை இசையுடன் அபிநயித்துப் பாடிவரும்போது;

“கடுவினை களையலாகும் காமனைப் பயந்தகாளை
இடவகை கொண்டதென்பர் எழிலணி யனந்தபுரம்
படமுடை யரவிற்பள்ளி பயின்றவன் பாதங்காண
நடமினோ நமர்களுள்ளீர் நாமுகக்கறியச் சொன்னோம்”

என்ற பாசுரம் வர, அரையர் ஆளவந்தாரை நோக்கி “நடமினோ நமர்களுள்ளீர் நாமுமக்கறியச்சொன்னோம்” என்ற நான்காமடியை பன்முறை அழுத்தமாயருளிச்செய்ய, ஆளவந்தாரும் இதனைப் பெரிய பெருமாள் ஆக்ஞையெனக் கொண்டு அந்த நிமிஷமே திருவனந்தபுரம் பிரயாணப்பட்டார். அப்போது இவர் தமது அந்தரங்க சீடரான தெய்வவாரியாண்டானை மடத்திற்குக் காவலாக நியமித்து அங்கேயே நிறுத்திவிட்டு சில முதலிகளோடு பயாணகதியாக வழி

நடந்து திருவனந்தபுரத்தையடைந்து அங்கே பத்மநாபன் முதலிய எம்பெருமான்களைத் தரிசனஞ்செய்து பரவசப்பட்டிருந்தார். இவர் நிலை இவ்வாறாக, ஸ்ரீரங்கத்திலிருக்கும் தெய்வவாரியாண்டான் ஆசார்யரான ஆளவந்தாரது பிரிவைச் சகிக்கமுடியாமல் அன்ன பானாதிகள் செல்லாது சரீரம் இளைத்து மிகவும் துர்ப்பலராய் எழுந்திருக்க முடியாதபடி படுக்கையில் கிடக்க, அங்குள்ள முதலிகள் பல வைத்தியர்களை யழைத்துவந்து வேண்டும் சிகிச்சைகள் செய்வித்தும் பயனிலதாய்முடிய, முதலிகள் சங்கித்து ஆண்டானை நோக்கி "உமது நோய்க்குக்காரணம் யாது" என வினவ, அவரும் "ஆசார்யரான ஆளவந்தாரது பிரிவைத் தாங்கமுடியாத நோயேயன்றி அடியேனுக்கு வேறு நோயிலது" எனக்கூற முதலிகளும் இன்னும் சில தினங்கள் கழிந்தால் இவர் உயிருக்கே ஆபத்துவருமெனப்பயந்து ஓர் கட்டணம் கட்டி அதில் ஆண்டானைக் கிடத்தி தூக்கிக்கொண்டு ஆளவந்தார் சென்றிருக்கும் அனந்தபுரத்தை நாடிச்சென்றார்கள். சில தினங்களில் இவர்கள் திருவனந்தபுரத்திற் கருகில் கரையனையாற்றங்கரையில் எழுந்தருளியிருக்கும் ஆளவந்தாரைசமீபித்ததும் ஆண்டானுக்குத்திருமேனி வாட்டந்தீர்ந்து தைரியம்பிறந்து உள்ளம் பூரிக்க கட்டணத்தை விட்டுக்குதித்து கால்நடையாக நடந்துவந்து ஆளவந்தாரையடைந்து அவர் திருவடிகளில் விழுந்துகிடந்தார். ஆளவந்தார் ஆண்டானுடைய திருமேனி வெளுத்து உருமாறியிருக்கிற காரணத்தையும் வந்த காரணத்தையும் உடன் வந்த முதலிகளால் அறிந்து கேட்டீரோ முதலிகாள்! சக்கரவர்த்தித் திருமகனார் ஸ்வதந்திரரும் சூரருமாயிருக்கையாலே அன்று பரதாழ்வான் அவர் ஆக்ஞைப்படி வனவாசத்தை விடுத்து திருவயோத்தியின் பரிபாலனத்தை மேற்கொண்டார். நாம் ஸ்வதந்திரரும் சூரருமின்றிக்கேயிருக்கையாலே இவர் நாம் வைத்த இடத்திலிராமல் இங்குவந்தாரென்று அருளிச்செய்ய, ஆண்டானிதைக் கேட்டு மிகவும் கலங்கின சிந்தையோடு விழுந்தபடியே கிடக்க, நீர் என்னை ஸ்வதந்திரனும் சூரனுமாக்கினாலொழிய எழுந்திரேனென்று கிடக்கின்றீரோ என ஆண்டானை நோக்கி அருளிச்செய்ய, ஆண்டானும் பரபரப்பாய் எழுந்துநின்று கண்ணீர் சொரிய அஞ்சலி செய்து தான் செய்த அபசாரங்களைப் பொறுத்தருளும்படி கேட்டுக்கொள்ள, ஆளவந்தார் ஆண்டானது ஆசார்யபக்திக்கு வியந்து அவருடைய திருமேனியைத் தடவி சமாதானம் செய்தருளினார்.

பின்னர் ஆளவந்தார் ஆண்டானை நோக்கி "அதோ தெரிகின்ற திருக்கோபுரந்தான் திருவனந்தபுரம். அங்கு சென்று எம்பெருமானைச் சேவித்து வாருமென்றருளிச்செய்ய, "ஆண்டான் அடியேனுடைய திருவனந்தபுரம் எதிரேவந்திருக்க அங்கு செல்வானேன்?" என்று முதலிகளை நோக்கி அருளிச்செய்ய ஆளவந்தாரும் முதலிகளும் ஆண்டானது அன்புக்கு மெச்சிக் கொண்டாடினார்கள்.

....

ஸ்ரீ வைஷ்ணவ சமயாசாரியர்களில் நம்பிள்ளை யென்பார் ஒருவர். இவர் ஆழ்வார் கவிகட்குப் பொருள் விளக்குவதில் மிகத் தேர்ந்தவர். இவரது சொற்பொழிவைக் கேட்க பல்லாயிரக்கணக்கானோர்கள் கூடுவதுண்டு. ஆதலால் அநேகம் சீடர்கள் இவரைத் தெய்வம்போல் போற்றிவந்தனர். இச்சீடர்களில் பின் பழகிய பெருமாள் சீயர் என்பார் தலைமை வாய்ந்தவர். இவர் எப்பொழுதும் நம்பிள்ளை திருமாளிகையில் காத்திருந்து வழுவிலாவடிமை செய்து வாழ்ந்துவருங் காலத்தில் ஓர்நாள் இவர் கொடிய சுரத்தால் பீடிக்கப்பட்டார். சுரத்தின் வேகத்தால் நாவும் உலர்ந்து கைகால்களும் இழுக்க ஆரம்பித்தது. அப்போது இவர் தனக்கு மரணம் கிட்டியிருப்பதாக நினைத்துப்பயந்து தனக்கு அந்தரங்கரான சில ஸ்ரீ வைஷ்ணவர்களை யழைத்து எப்படியாவது தனக்கு பிராண பிக்ஷையளித்து ரக்ஷிக்க பெரியபெருமாளைப் பிரார்த்தித்து வரும்படி அனுப்பினார். அவ்விதமே அவர்களும் அணியரங்கத் தரவணையிற் பள்ளிகொள்ளும் பெரியபெருமாளை யடைந்து பின்பழகிய பெருமாள் சீயரின் விருப்பத்தை நிறைவேற்றிவைக்கும்படி பிரார்த்தித்துத் திரும்பினர். சின்னாளில் சீயருக்கு உடம்பு சொஸ்தமாகவே, இவ்விருத்தாந்தத்தை சில முதலிகள் கேள்வியுற்று நம்பிள்ளையிடம் சென்று ஸ்வாமீ! பின்பழகிய பெருமாள் சீயர் மரணத்திற்குப்பயந்து பெருமாளிடம் உயிர்ப்பிச்சை கேட்டது நம் சொரூபத்திற்கு அடுக்குமா எனக் கேட்க, நம் பிள்ளையும் வாரீர் முதலிகாள்! சீயர் அபிப்பிராயம் யாம் அறிந்திலோம், ஆயினும் இவ்விஷயம் விசாரணை செய்யத்தக்கதே. நம் தர்சனத்தில் சர்வசாஸ்திர பாரங்கதராய் பிள்ளை எங்களாழ்வான் எழுந்தருளியிருக்கிறார். திருநாராயணபுரத்தரையரோ மிக்க விவேகமுள்ளவர். அம்மங்கியம்மாளும், அம்மங்கிப் பெரியமுதலியாரும் சம்பிரதாய நுணுக்கம் அறிந்தவர்கள், இந்நால்வரையுங் கண்டு இவ்விஷயத்தைக் கேட்டு வாருங்

களென்று ஆக்ஞாபிக்க, இவர்களும் அவ்விதமே சென்று கேட்டு மீண்டும் நம்பிள்ளை சந்நிதியை அடைந்தனர். அப்போது பின்பழகிய பெருமாள் சீயரும் அங்கு எழுந்தருளி நம்பிள்ளையை வணங்கி நின்றார். அக்காலத்தில் முதலிகட்கும் நம்பிள்ளைக்கும் நடந்த சம்பாஷணை பின்வருமாறு:—

நம்பிள்ளை:— முதலிகாள்! யாம் கூறியபடி அந்நால்வரையும் கண்டு உங்கள் சந்தேகத்தைக் கேட்டீர்களா?

முதலிகள்:—ஆம். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் அபிப்பிராயம் கொடுத்தார்கள்.

நம்பிள்ளை:— பிள்ளை எங்களாழ்வான் என்ன அபிப்பிராயம் கொடுத்தார்.

முதலிகள்:—ஸ்வாமீ! "அவர் ஸ்ரீ ரெங்கைஸ்வர்யத்தில் ஸங்கம்போலே காணும் சீயரிருப்பது" என அருளிச்செய்தார்.

நம்பிள்ளை:—ஆஹா! இது நன்றாயிருக்கிறது. ரெங்கைஸ்வரியமாவது ரெங்கநாதனது பரிகரங்கள், ஆடையாபரணங்கள், விருதுகள், வாகனாதிகள் முதலியவைகளாம். இவைகளில் சங்கமும் ஒன்று. இச்சங்கம் மிக முக்கிய சந்தர்ப்பத்திற்கு உபயோகிக்கப்படுவது. ஆதலால் நமது சீயரை சங்கத்திற்கு ஒப்பிட்டு அவர் இழக்கத்தக்கவரல்லவென்பதை வற்புறுத்தினார்போலும். சரி, இருக்கட்டும். இவ்விஷயத்திற்கு திருநாராயணபுரத்தரையர் என்ன அபிப்பிராயம் கொடுத்தார்?

முதலிகள்:— அவர் "இங்கு துலககின கைங்கர்யம் முடிவு பெருமையாலே காணும்" என்றருளிச் செய்தார்.

நம்பிள்ளை:— அப்படியா! ரெங்கநாதன் சந்நிதி கைங்கர்யம் முடிவு பெறுதிருப்பதால் அமமுடிவைப் பார்த்துப் போக சீயர் ஆசைப்பட்டிருப்பதாகக் கருதினார்போலும். சரி, இருக்கட்டும். அம்மங்கியம்மாள் என்ன அபிப்பிராயம கொடுத்தார்? சொல்லுங்கள்.

முதலிகள்:— "நம்பிள்ளை கோஷ்டியிலிருந்து பகவத் விஷயம் கேட்கிறவர்கட்கு வேறொரு தேச விசேஷம ருசிக்குமோ" என அருளிச்செய்தார்.

நம்பிள்ளை:— எமது கால க்ஷேபத்தில் ஈடுபட்டிருப்பதால் இதைவிட்டுப் பிரிய சீயர் விரும்பவில்லை யென்பது அவர் அபிப்பிராயம் போலும். சரி, இருக்கட்டும். அம்மங்கிப் பெரியமுதலியார் திருவுள்ளம் என்ன?

முதலிகள்:— "நம்பெருமாள் சிவந்த திருமுக மண்டலமும் கஸ்தூரித் திருநாமமும் பரமபதத்திலே கண்டிலேனாகில் ஒரு மூலையடியே முறித்துக்கொண்டு மீண்டு வருவேனென்றன்றோ பட்டர் அருளிச் செய்தது. அவ்விதமே இவரும நம்பெருமானது திருமுக மண்டல சேவையை விட்டுப் பிரிய மனமில்லாதவராக வேணும்" என்றருளிச் செய்தார்.

நம்பிள்ளை இவற்றை யெல்லாம கேட்டு தன் முன்னே வணங்கி நிற்கும் பின் பழகியபெருமாள் சீயரை நோக்கிப் புன்னகை புரிந்து;

சீயரே! இவர்கள் கூறிய அபிப்பிராயங்கள் உம்முடைய நினைவுக்கு ஒத்திருக்கின்றதா?

சீயர்:— ஸ்வாமீ! இவைகளனைத்தும் அடியேனுடைய அபிப்பிராயமன்று.

நம்பிள்ளை:— உமது அபிப்பிராயத்தை யாம் அறிவோம். ஆயினும் அதை நீரே வெளியிட விரும்புகிறேன். இவர்கள் எல்லோரும் அதைக் கேட்க ஆவலாயிருக்கிறார்கள்.

சீயர்:— தேவரீர் திருமஞ்சனசாலையில் திருமஞ்சனம்கொண்டருளி தூயவுடையான்ட திருவுத்தரீயம் சாத்தி உலாவி யருளும் போது குறு வேர்வையுடன் கூடிய திருமுக மண்டல செவ்வியையும், அப்போது அடியேன் சுற்றிச் சுழற்றிப் பரிமாறுகிற கைங்கர்யத்தையும் விட்டு அடியேனுக்குப் பரமபதத்திற்குப்போக இச்சையாயிருப்பதில்லை, பெருமுகோல் வாசமும் இன்னும் சிறிது காலம் இங்கேயிருந்து பெறவேணுமென்று நினைத்துப் பெருமானிடம் உயிர் பிச்சையை யாசித்தேன். இதுவே அடியேனது விருப்பம்.

இம்மொழிகளைக் கேட்டதும் நம்பிள்ளையும் முதலிகளும் சீயரது ஆசார்ய பக்திக்கும் அறிவு நுணுக்கத்திற்கும் வியந்துகொண்டாடினார்கள்.

ஸ்ரீ

ஸ்ரீ ஆண்டாள் பிராட்டியாரின் அருந்திறன்.

முன் 20-ம் பக்கத் தொடர்ச்சி.

இதனாற்றான் நம்பெருமானையே பற்றுக்கோடாகக்கொண்ட ஸ்ரீ வைஷ்ணவர்கள் செய்கின்ற செய்கைகளும், செய்வாரின்றவைகளும செய்து முன்னிறந்தனவும் செய்கைப் பயனுண்பானும எம்பெருமானேயாகி யிருக்கின்றமையால் அவனையே உபாயோபேயமெனப்பற்றி யிருப்பர். இன்னும் ஓர் சிறு எறும்பிற்கும் உயிர் கொடுக்க வன்மையற்ற இவர்கள் தங்கள் தன்மையைக்கருதி கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஆடு, கோழி முதலிய பல பிறவுயிர்களை நீக்குவதற்கு எங்கிருந்து அதிகாரம் பெற்றார்களோ வறியோம். அவிசொரிந்து ஆயிரம் வேள்வி யியற்றுதலைக் காட்டிலும் ஒன்றின் உயிரை நீக்கும் கொடிய வினையை யியற்றாமலிருத்தல் நலமன்றோ?

இன்னும் நம்மனோர்களில் சிலர் நோன்பு செய்யும் காலத்திலேயே பால் நெய் மிகுதியுங் கலந்தனவும், விரைவில் ஜீரணிக்காததுமான தாமத குணப் பண்டங்களை யுண்டு களிக்கின்றார்கள். விரதாதி நோன்புகளை நம் பெரியோர்கள் ஏற்படுத்தியதின் கருத்து தேக சுகம ஆன்ம சுகம் ஆகிய இரண்டையும் தருவதற்கேயாகும். ஒருவர் குறைந்தது பதினைந்து நாட்களுக்கொரு முறையேனும் பட்டினியிருப்பாராகில் வயிற்றுக்குளிருக்கும் அசுத்தங்கள் யாவும் கழிந்து தேகத்திற்குச் சுகத்தையும், அன்று முழுதும் உணவு சமைத்தல் முதலிய பல வேலைகளின்மையால் அச்சமயத்தை எம்பெருமானை உண்மை யன்புடனும், மனத்தூய்மை யுடனும போற்றுவதில் கழிப்பின் அது பாவ வினைகளைப் போக்கி ஆன்மாவிற்குச் சுகத்தையும் தருவதாகும். இதன் காரணமாகவே பெரியோர்கள் பதினைந்து நாட்களுக்கொருதரம் ஏகாதசி முதலிய விரதங்களை ஏற்படுத்தினார்கள். இதையறியாது இப்போது நம்மனோர்களில் சிலர் செய்யும் விரதங்கள் தேகத்திற்கும் ஆன்மாவிற்கும் யாதொரு பயனையுங் கொடாமலிருப்பதுந் தவிர நோயையும் தருவதாயிருக்கிறது. ஆகவே நோன்பு நோற்கின்ற முறையை நம் கோதையார் திருப்பாவை யென்கிற மார்கழி நீராட்டத்திலே தானே செய்து காட்டுகின்றார்.

நம் கோதா பிராட்டியார், தான் வசிக்கும் வில்லிபுத்தூரை ஆயர்பாடியாகவும், வடபத்ரசாயியின் கோயிலை நந்தகோபருடைய மனையாகவும், அத்திருக்கோயிலிலுள்ள எம்பெருமானைக் கண்ணனாகவும், தன் தோழிகளையும், தன்னையும் முன் கண்ணபிரானை நோக்கி நோன்பு நோற்ற ஆயர் மங்கையர்களாகவும் வைத்துக்கொண்டு நோன்பு நோற்பதாகத் தீர்மானித்து திருப்பாவை என்னும் நோன்பை இழைத்தனர். திருப்பாவை என்றால் திரு = அழகிய பாவை = நோன்பு எனப் பொருள்படும். ஓர் நூலிற்கு கடவுள் வாழ்த்தைக் கொண்டும், ஆக்கியோன் பெயரைக்கொண்டும், அந்நூலிலுள்ள முதலடியைக்கொண்டும், கடைசி யடியைக்கொண்டும் பேரமைப்ப துண்டு. அவைகளில் இம்முப்பது பாசுரங்களின் கடையிலும் எம் பாவாய் எனவரும் மகுடத்தைக்கொண்டு இந்நூலிற்கு திருப்பாவை எனப் பெயரிடப்பட்டது. சைவ குரவர்கள் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகரும், மார்கழி நீராட்டம் என்னும் நோன்பு செய்யும் முறையின்படி சிருஷ்டிக்கிரமத்தின் கருத்தை உட்கொண்ட பாசுரங்கள் இருபது பாடியுள்ளார். இதற்குத் "திருவெம்பாவை" எனப் பெயரிட்டுள்ளது.

ஒரு வருடத்தை தக்ஷிணாயனம், உத்தராயனம் என இரண்டு அயனங்களாகப் பிரித்துள்ளார்கள். அதாவது ஆடி முதல் மார்கழி வரை தக்ஷிணாயனம் என்றும், தை முதல் ஆனி வரை உத்தராயனம் எனவும், இந்த இரண்டு அயனங்களில் தேவர்களுக்கு தக்ஷிணாயனம் இரவென்றும் உத்தராயனம் பகல் என்றும் கூறப்படுகின்றது. இதில் தக்ஷிணாயனத்தின் கடைபாகமாகிய மார்கழித் திங்கள் தேவர்கட்குப் படைப்புக் கேதுவாயிருக்கும் உதயகால மாதமாதலால் அத்திங்களில் நம் கோதையார் எம்பெருமானை நோக்கி நோன்பு நோற்கின்றார்.

உலகத்தைத் திருத்துதற்பொருட்டு ஸ்ரீமந்நாராயணன் கிருஷ்ணாவதாரமெடுத்தபோது, அவர்மாட்டு மிக்க அன்புடையவர்களாய் அவரையே பற்றுக்கோடாகவெண்ணி யாதவகுலத்தில் வந்துதோன்றிய கோபிகள் தங்கள் குடும்ப காரியங்கள் முதலிய தேக சம்பந்தமான விஷயங்களை அதிகமாய்க் கவனியாமல் கண்ணன்மாட்டே மிக்க அன்புடையவர்களாய், அவரை விடாது பற்றித்திரியும் தன்மையைப் பார்த்த ஆன்றோர்கள் இவர்கள் உள்ளன்புடையோராய்

இவர்களைக் கண்ணனிடம் சேரவொட்டாது பிரித்துவைக்க, உள் ளன்புடைய இக்கோபிகள் எம்பெருமானை அடைவதற்கில்லாமல் படுகின்ற பெருந்துன்பத்தினால் ஊரில் மழை யில்லாமற்போயிற்று. இதனால் யாதவர்கள் மழை வருவதற்கு அப்பெண்மணிகளை நோன்பு நோற்கும்படியும், அதற்குக் கண்ணனைத் தலைமை வகிக்கும்படியும் கோபிகளையும் கண்ணனையும் வேண்டினார்கள். அதற்கு மிக்கக் களிப்புடன் சம்மதித்த இடைப்பெண்கள் தம் தோழிகளை எழுப் பிக்கொண்டு இதுகாறும் பிரிந்திருந்த கண்ணனையும் எழுப்பித் தங் களுக்கு வேண்டிய வரங்களைக் கேட்டல் முதலியவைகளைச் செய்து தங்கள் நோன்பை முடித்தார்கள். இதை பெரியார் வாயினாய்க் கேட்டறிந்த நம் கோதா பிராட்டியார் தாமும், பிரிந்திருந்த எம் பெருமானை யடையும்பொருட்டு இடைப்பெண்களாகிய கோபிகள் செய்த நோன்பை செய்யத்தலைப்பட்டனர்.

தலைவனை விரைவில் அடையவேண்டுமென விசேஷ அன் புடைய தலைவி, திருமங்கையாழ்வார் நம்மாழ்வார்களைப் போன்று மடலூர்வது வழக்கமாயிருப்பினும் இதைவிட மிகச் சிறப்புற்றதும், தலைவனை விரைவில் பணியாகச் செய்வதுமான நோன்பே மேம்பட் டதென நினைத்து அதனையே நம் கோதையார் மேற்கொண்டனர்.

இனி நம் கோதையார் தான் நோன்பியற்றுங்கால் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாவையைச் சிறிது ஆராய்வாம். ஆனால் இது திருப்பாவையின் விரிவான ஆராய்ச்சியல்லவாதலாலும், நம் அன்னை யாரின் வாழ்க்கை விசேடங்களைக் கூறுமுகத்தான் விளக்கவேண்டிய பல பகுப்புகளில் இதுவுமொன்றாதலாலும் இதனை தனித்தனியாய் விசேடித்து ஆராய்வதை நிறுத்திச் சுருக்கிக் கூறுவாம்.

பிராட்டியாரின் பெருந்தகைமை.

ஆழிகுடி இராமய்யங்கார் எழுதுவது.

பிராட்டி யென்பது பிரான் என்ற தலைவனது பெயருக்கேயா தலை மகளைச் சிறப்பித்துக் கூறப்படுவதோர் பெயராம். பிரான் என்பது கைம்மாறு கருதாது பிறர்க்குதவி செய்வதையே தனது இயற்கைக் குணமாகவுடைய ஒருவனை உதவிபெற்றவர்கள

உபகார ஸ்மிருதியால் (நன்றி பாராட்டுதலால்) குறித்துக் கூறுவ தோர் பெயரென்பர். அத்தலைவனது கொள்கையை யனுஸரித்த தலைவியைப் பிராட்டி யென்ப. இராமபிரான் – கண்ணபிரான் – எம் பிரான் எனவும் – பிராட்டி – ருக்மணிப் பிராட்டி– ஸீதா பிராட்டி- நப்பின்னைப் பிராட்டி எனக் கூறுவதும் இருபற்றியே. இங்கு நாம் எழுதப் புகுவது ஸீதா பிராட்டியாரின் பெருமையைப் பற்றியதா கும். பிராட்டி யென்னும் பெயர் மற்றத்தேவிமார்களுக்கும் வழங் கப்படுமாயினும் ஜானகிப் பிராட்டியாருக்கே சிறப்பித்துக் கூறுவ தொன்றாகும். ஏனெனில் உலகினர்க்கு உபகரிக்கும் தன்மையில் கடல் ஞாலத்தளிமிக்கான் என்றபடி பெருங்கருணை கொண்டு

* "காட்டில் பிறந்து படாதனப்பட்டு மனிசர்க்கா
நாட்டை நலியுமரக்கரை நாடித்தடிந்திட்டு
நாட்டை யளித்துய்ப்பச செய்து நடந்த"

தயரதன் மைந்தனை அருட்பெருந் தலைவனது செயலுக்கேற்ப தாமும் படாதன பட்டுக் கொடுங்கானகம் புகுந்து கடந்து இலங் கையில் சிறைவாஸம் செய்தும் தமது பெண்மைக்குரிய குணங் களின் மேம்பாட்டை உலகினில் நிலவச்செய்தும் போந்தனராகலின் இவர்க்கே பிராட்டியென்னும் திருநாமம் சிறப்பித்துக் கூறுதல் சாலும். இன்னவர் தம் குணம் செயல் முதலிய அருமை பெருமை களை எழுதப்புகின் மிகப்பரந்து செல்லுமாகலின் ஈண்டு சுருங்கச் சிறிது வரைந்து செல்வாம்.

இன்னவர் தம்துயர் தீர ஸ்ரீராமன் வெங்கானம புகுதுங்காலை யில் தானும தன் பூவின்மெல்லிய பொன்னடிகள் கொதித்துக்கொப் புளம் அரும்பப் பின்தொடர்ந்து சென்றனர் என்பதை "போர் வேந்தன்

தன்னுடைய தாதை பணியாலரசொழிந்து
பொன்னகரம் பின்னே புலம்ப வலங்கொண்டு
மன்னும் வளநாடு கைவிட்டு மாதிரங்கள்
மின்னுருவில் விண்டேர் திரிந்து வெளிப்பட்டு
கன்னிரைந்து தீய்ந்து கழைபுகைந்து கால் சுழன்று
பின்னும் திரை வயிற்றுப்பேயே திரிந்துலவாக்

* திருவாய்மொழி 7, ப- ஓ. தி 2, பா.

கொனைவிலும் வெங்கானத்தூடு கொடுங்கதிரோன்
துன்னு வெயில் வெறுத்த வெம்பரன் மேல் பஞ்சடியால்
மன்னனிராமன் பின் வைதேவி யெனறுரைக்கும்
அன்ன நடைய வணங்கு நடந்திலளே."

எனத் திருமங்கையாழ்வார் பெரிய திருமடலில் திருவாய்மலர்ந் தருளினர். இவ்வாறு வெய்யகான் புகுந்த செய்ய மாமலர்ச் செல்வியார் மாரீசனாகிய பொன்னிறத்த மானின் வ்யாஜமாக இலங்கைமா நகரம் புகுந்து தேவர் முனிவர் ஆதியரான பலர் தம் காதலிமாருடன் சிறைத்துயரம் நீங்கி உய்தற்பொருட்டு தாம் ஊணுறக்கம் முதலியன துறந்து அளவிறந்த துயரத்துடன் சிறைவாஸம் செய்தனர். இங்ஙனம் நமதன்னையார் சிறைவாஸம் செய்த பெருமையினை ஓர் பக்தர் உள்ளமுருகி ததும்பி ஓதுங்கவியாவது:—

"ஒதிமநடிக்கடி நடந்து படுதன்பினை யொழிந்தவனி னைப்பாறவும்
உற்றிலும் வெளிக்குவடெடுக்குமெனவே கருதுமோதிமகள் பீதியறவும்
சாதிசிறை யுண்டக ணைப்பதிச் சிக்கினிய காதல்கொடு தானமகிழவும்
காசினியிலாசின முனிவோர்கள் மகிழ்கற்புடைய கன்னியர்கள் களிகூறவும்
வீதி திசை யானைகளின் கோடுகள் திரும்பி யறல்விட்டு கிளைவிட்டு வரவும்
வீறு சுரரானவர்கள் காதலிகளோடடிமை விட்டவர்கள் வீடேறவும்
ஆதிமறை யோது தவம் ஓங்கட லரக்கனகர் அருஞ்சிறை யிருந்தவளையே
ஆதவனெப்பெருகு வீரராகு ராமர் மகிழ்வல்லியெமையாண்டருள்வையே."

எனக்கசிந்து போற்றினர். மற்றையோரது எழ்மையை நீக்கத்தாம் எழ்மைப்பட்டிருந்தனர். மற்றும் கல்லார் பலர் அடிமை நீங்கி இன்புறத்தாம் அடிமையைப் போன்றிருந்தனர். அந்தோ! இவ்வருள்குணத்தின் பெருமையினை ஆரறிவார்! உயரியர் பலர் அறிவரன்றே இராமாயணமென்னும் பெருங்காப்பியத்துள் உயிர் நிலை யிவ்விடமெனத் தேர்ந்த பெரியார் நிலையிட்டனர். "இதிகாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீ ராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றம் சொல்லுகிறது. மஹாபாரதத்தால் தூதுபோனவனேற்றம் சொல்லுகிறது' என்பன ஸ்ரீவசன பூஷணவாக்யங்கள். தூதுபோதலும் சிறையிருத்தலும் உலகில் தாழ்வாகக் கருதப்படுவதாயினும் இங்கு சிறையிருந்தவளேற்றம் சொல்லுகிறது என்றதின் கருத்து. தன்னலம் பாராது பிறர் நலம் கருதிச்செய்யும் செயல்களனைத்தும் மேம்பாட்டினையே தரும் என்பதைப் பற்றியதாம். தன்னலங்கருதிச் செய்

சாற்போதே பிழிபாமென்க. இன்னமும் பிராட்டியார் தம் பெருமையினை விவரிக்குமிடத்து ஸ்ரீஇராமபிரானுடைய அஸ்வமேத மஹா மணி மண்டபத்தில் வால்மீக சிஷ்யர்களான குசலவர்கள் இராமாயணத்தைக் கானஞ் செய்யுமளவில் காகுத்தன் பரவசமுற்று ஸபையினரை விளித்து, ஸீதாயாச்சரிதம் மஹத் என இது ஓர் கற்பரசியின் உயரிய சரிதமாகலின் மிக்க ஆதரவுடன் கேளிர் என்று விளம்பினன். மற்றும் உலகில் சிறப்புடைய கற்பரசிகள் பலருளரேனும் ஆயினும், அவர், தம் கற்பினை வழுவாது காத்துச்சிறப்புற்றவரேயாவர். இவர் கற்புங் காருண்யமும் ஒருங்கேயுடையராவர். பல்லுயிர்கள் பக்கல் காருண்ய மிகுதியினாலேயன்றோ கொடுங்கோல் புகுந்த இலங்கையில் சிறையிருந்தனர். இக்காருண்யத்திற்குக் காரணமும்,

* "உலகம் யாவையும் படைத்தளித்தண்மயி னொருவன்
இலகு மார்பகத்திருந்துயிர் யாவையுமீன்ற
திலகவாணுதல்."

என்றபடி உலகத்துயிர்க்கெல்லாம் அன்னையாகையாலே வந்ததாம். "தேவீ காருண்யரூபா" என பகவானது கருணையே வடிவமாகவே தேவி விளங்குகிறாளென்பது ஞானிகளின்கொள்கை. மற்றை மடந்தையரினும் இவர்க்குள்ள சிறப்பை

"துணைவனை யென்கூறுவத் கொம்பினைச்சேர்த்தலை உய்யப்
பிணக்குவன வழிவினைத் தவஞ்செய்துபெற்றதகாண்
கணக்குழையார் னெழுந்ததற்பின் கதிர்வானில்கங்கையெனும்
அணங்கிழியப் பொலிவிழந்தவாரொருத்தார் வேறுற்றார்"

எனக் கம்பர் கூறியிருப்பதும் அறியத்தக்கன. இன்னமும் நளனது பத்தினியான தமயந்தி தன்னைத் தீண்ட நெருங்கின வேடனை எரிக்கிடுகவெனச் சபித்திட்டனள். அஃதவள் கற்பின் மாட்சிமையேயாகும். அனுமனது வாலில் அரக்கர் நெருப்பையிட்டனர். அத்தருணம் பிராட்டியார் அக்னிதேவனை நீ ஜலத்தின் தன்மையையடைந்திடு என்றனர். அதனால் அனுமனுக்கு உடல் வெவ்விட்டு குளிருக்குப் போர்வை தேவையாயிருந்தன. ஆக தமயந்தி சபித்த மட்டில் நெருப்பின் செயலை நெருப்புச் செய்தது- அது நெருப்புக்கு

---

* கம்பராமாயணக்காப்பால்,

இயற்கையாகும். இங்கு பிராட்டியார் சொல்லியவுடன் நெருப்பு நீரின்றன்மையையன்றே அடைந்திருக்கின்றது. இரண்டும் ஒன்றற்கொன்று ஜன்மவிரோதிகளல்லவா. இதனாலும் மற்றைக் கற்பரசிகளிலும் பிராட்டியாரின் சக்தி விசேஷம் நன்கு புலனாகும். இவ்வற்புத சக்திகள் இவரிடத்தில் மட்டுமுள்ளதொன்றன்று. இவர் தலைவனான இராம பிரானிடத்திலு முள்ளதொன்றாகும். தலைவி நெருப்பை நீராகுக என்றாள். தலைவன் நீரை நெருப்பாகுக என்றான். அதாவது காகுத்தன் கடலில் அம்பு தொடுத்தகாலையில் நீரெல்லாம் நெருப்பாயெரிந்தன. இதனை நம் கவித்தலைவராம் கம்பபெருமான்

"அண்டமூலத்துக்கப்பா லாழியுங்கொதித்ததேழு
தெண்டிரைக்கடலின்செய்கை செப்பியென தேவன்சென்னிப்
பண்டைநாளிருந்தகங்கை நங்கையும்பதைத்தாள் பார்ப்பான்
குண்டிகையிருந்தநீரும் கொளகொளக்கொதித்தவன்றே."

எனவும், ஸீதா பிராட்டியார் அக்னிதேவனை குளிரச் சொன்ன பொழுது.

"மற்றினிப் பலவென்வேலை வடவனல் புலியனாய
கற்றையங்கனலி மற்றைக்காயத்தீ முனிவர்காக்கும்
முற்றுறுமும்மைச் செந்தீமுப்புரமொருங்கச் சுட்ட
கொற்றவன்னெற்றிக்கண்ணின் வன்னியுங்குளிர்ந்ததன்றே.

அண்டமுங்கடந்தானங் கையனலியும் குளிர்ந்ததங்கித்
குண்டமும் குளிர்ந்தமேகத்துரு மேலாங்குளிர்ந்தகொற்றச்
சண்டவெங்கதிரவாகித் தழங்கிருள் விழுங்குந்தாவில்
மண்டலங்குளிர்ந்த மீளா நரகமும் குளிர்ந்த மாதோ.

எனவும் அற்புத சக்தியினை யமையக்கூறினர். இவ்வாறு சிலபின்னதென்றருந்ததிக்கருளிய திருவாம் பிராட்டியார் கற்பின் பெருமையினை உள்ளமட்டும் உயர்த்திக்காட்டியபடியால் கற்பிற்கு இவ்வளவு பெருமை யிருக்கிறதா என நினைந்து தேவர்களும், சிவபிரானும், திருமாலும் தங்கள் பத்நிமார்களை இவ்விதமாகக் கொண்டாடினர் என்பதை கவிச்சக்ரவர்த்தியார்

சோகத்தாளாய நங்கை கறபினால் தொழுதற்கொத்த
மாகத்தார் தேவிமார்கள் வான் சிறப்புற்றார் மற்றைப்
பாகத்தாளிப்போ தீசன் மகுடத்தாள் பதுமத்தாளும்
ஆகத்தாளல்லண் மாயனுயிர மௌவி மேலாள்.

எனக் கட்டுரைகின்றனர். (தொடரும்)